



# மாயவலை

■ பா.ராகவன்

நமக்கு அதிகம் பரிச்சயமானவரில்லை என்றாலும், ஸ்பெயின் மன்னர் ஜான் கார்லோஸ் - ரொம்பப் பெரிய ஆள். பதவியால் மட்டுமல்ல. அவருக்கு இருந்த மக்கள் செல்வாக்கு மகத்தானது. ஸ்கேல் வைத்து அளந்து பார்த்தால், ஏழெட்டு அடி தொலைவில் அவர் இங்கிலாந்து ராணி விக்டோரியாவுக்கு ஒண்ணு அல்லது இரண்டு அல்லது மூணு விட்ட சகோதரர் உறவு வருவார். 1938-ம் ஆண்டு ரோம் நகரில் பிறந்து, ஸ்பெயினுக்கு இடம் பெயர்ந்தவர். ஸ்பெயினின் புகழ்பெற்ற ராணுவ ஆட்சியாளர் ஃப்ரான்சிஸ்கோ ஃப்ராங்கோ (இவர்குறித்து ஏற்கெனவே சில வரிகள் பார்த்திருக்கிறோம்!) 1975 நவம்பரில் இறந்ததும் எவ்வித சிக்கலும் இல்லாமல், ஒட்டுமொத்த தேசத்தின் சப்போர்ட்டுடன் ஸ்பெயினின் மன்னராக முடிசூட்டப்பட்டவர்.

பதவிக்கு வந்ததும் ஜான் கார்லோஸ் புரிந்துகொண்ட முதல் விஷயம், இனி இங்கே சர்வாதிகாரம் உதவாது என்பதுதான். ஜனநாயகத்தை மிகத் தீவிரமாக நேசித்தவர் அவர். ஆனால், முடியாட்சி ஜனநாயகம் என்கிற ஃபார்முலாதான் மேற்கில் ஃபேமஸ். இங்கிலாந்தில் இருக்கிற அதே மாடல். மன்னர் ஒருவர் இருப்பார். நாடாளுமன்றமும் இருக்கும். பிரதமர் இருப் பார். அமைச்சர்கள், எம்.பி.க்கள் இருப்பார்கள். சட்டங் களை நாடாளுமன்றம்தான் இயற்றும். ஆனாலும் அரச ரின் பெயரிலேயே அவை அமலாகும். எந்தச் சட்டத்தை யும் தூக்கவோ, நீக்கவோ மன்னருக்கு அதிகாரம் உண்டு.

சமர்த்து மகாராஜாவான கார்லோஸ், அந்த மாதிரி காரியம் எதையும் தனது சர்வீஸில் செய்ததில்லை. தேசம் எக்காரணம் கொண்டும் இனியொருமுறை சர்வாதிகார ஆட்சியின்வசம் விழுந்துவிடக்கூடாது என்பதுதான் அவரது கொள்கை. அதற்காக எப்போதும் நாடாளுமன்றத்தை அரவணைத்துக்கொண்டும், தேர்தல்களை ஒரு தேசியத் திருவிழாவாகக் கொண்டாடிக் கொண்டும் இருந்தவர் அவர்.

ஸ்பெயினில் அவருக்கும் அவரது திருமதிக்கும் (மாட்சிமை பொருந்திய மகாராணி கிரீஸின் இளவரசியாக இருந்தவர். ஸ்பெயின் ராணி ஆவதன் பொருட்டு ரோமன் கத்தோலிக்க மதத்துக்கு மாறியவர்.) லட்சக்கணக்கான ரசிகர்களே உண்டு. மன்னர் படு ஜாலியானவர். பொது நிகழ்ச்சிகளுக்கு பந்தா இல்லாமல் வந்து கலந்து கொள்வார். எம்.ஜி.ஆர். மாதிரி ஆயாக்களைப் பார்த்தால் கட்டிப்பிடித்துக் கொள்வார். கட்சி வித்தியாசம் பாராமல் எல்லா அரசியல்வாதிகளுடனும் நட்புக் கொண்டவர். யாராவது எதையாவது கேட்டு மனு எழுதினால், உடனடியாகச் செய்து கொடுக்கச் சொல்லி உத்தரவிடுவார்.

இதெல்லாம் கூட சாதாரணம் என்று விட்டுவிடலாம். 1978-ம் ஆண்டு ஸ்பெயினில் அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவர அவசியம் ஏற்பட்டது. அதிகாரங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தின் வசமே இருக்கும் என்றும் மன்னருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும்.



தேச நலனை முன்னிட்டு, தாமே முன்வந்து அந்தச் சட்டத்திருத்தத்தை அறிமுகப்படுத்தி வைத்தவர் கார்லோஸ். பச்சையாகச் சொல்வதென்றால், அதன்பின் அவர் டம்மி மன்னர்தான். ஆனாலும் சந்தோஷமாகவே அதனை ஏற்றுக் கொண்டார்.

இதனால் அவரது இமேஜ் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு வளர்ந்ததே தவிர, ஒரு சிறு சறுக்கலும் இல்லை. இன்றைக்கு வரை அவரது பேச்சுதான் ஸ்பெயினில் பிரதானமாக எடுபடும். தேசத்தின் மனச்சாட்சியாகவே அவரை மக்கள் பார்க்கிறார்கள்.

இந்த விஷயங்களையெல்லாம் யோசித்துப் பார்த்த பிறகுதான், மன்னரைக் கொன்று விடலாம் என்று முடிவு செய்தது இ.டி.ஏ.

இது மட்டும் சாத்தியமென்றால், இதனைக் காட்டிலும் மாபெரும் அதிர்ச்சி என்று ஏதும் இருக்க முடியாது. முழு தேசத்தையுமே ஒரு குலுக்குக் குலுக்கினது போலாகிவிடும். அத்தனை பேரும் கவனிப்பார்கள். ஸ்பெயினில் மட்டுமல்ல. உலகம் முழுவதும். மன்னரே போய்விட்டால் மாற்றங்கள் தவிர்க்க முடியாததாகும். சிறிய அளவில் ஒரு உள்நாட்டுப் புரட்சிகூட சாத்தியம்தான். பாஸ்க் தேசம் இருக்கட்டும், முழு ஸ்பெயினையுமே கூடக் கனவு காணலாம். குழப்பத்தின் பிடியில் தேசம் இருக்கும்போது, மீன் பிடிப்பது பெரிய விஷயமாக இருக்காது.

இவ்வாறெல்லாம் யோசித்து, மன்னரைக் கொல்லலாம் என்று முடிவுக்கு வந்தார்கள். நூறு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தார்கள். எந்தெந்த விதங்களில் மன்னரை அணுக முடியும், எப்படி முயற்சி செய்தால் காரியம் கைகூடும் என்று அலசி ஆலோசித்து அறிக்கை தரவேண்டியதே அவர்களது பணி.

'சேச்சே. இதற்கு இத்தனை பெரிய குழுவெல்லாம் எதற்கு? மன்னர் ஒரு பசு. ஈசியாகக் கடத்திக் கொண்டே கூட வந்துவிடலாம்.'
'மன்னர் எளிமையானவராக இருக்கலாம். ஆனால் செக்யூரிடி ஆசாமிகள் கிங்கரர்கள். அத்தனை சுலபத்தில் அணுக முடியாது. ஏழு கட்டப் பாதுகாப்பு வளையங்கள் உண்டு.'

'பொதுக்கூட்டங்களில் நிறைய பங்கு பெறுகிறாரே. மக்கள் நெருங்கி கை கொடுக்கிறார்களே.'

'அதெல்லாம் செட்டப். கூலிக்குக் கூட்டி வந்துவிடுவார்கள். நம்பாதே. இது உண்மையிலேயே மிகப்பெரிய சேலஞ்ச்.'
'அரண்மனைக்குள் நம்மால் ஊடுருவ முடியுமா?'

'அத்தனை எளிதல்ல. நியாயமான காரணம் சொல்லி அப்பாயின்மெண்ட் கேட்டு, இரண்டு மாதம் காத்திருந்தால்தான் கிடைக்கும். அங்கும் ஏழு கட்டப் பரிசோதனைகள் உண்டு. கிட்டத்தட்ட நிர்வாணமாகத்தான் மன்னரை நெருங்கமுடியும். அதுவும் இருபதடி தொலைவில்தான் நிற்க அனுமதி கிடைக்கும்.'

'அரண்மனையில் ஏதாவது வேலைக்கு நம் ஆட்களை அனுப்பி..'

‘மூஞ்சியைப் பார்! பாஸ்க் முகத்தைப் பார்த்தாலே தெரியாதா? எவன் கொடுப்பான் வேலை? மூக்கு ஆபரேஷன் பண்ணிக்கொண்டு வேண்டுமானால் முயற்சி செய்யலாம். ஆனால் நடக்காது.’

நாள் கணக்கில், வாரக்கணக்கில் யோசித்தார்கள். இடையில் ஒன்றிரண்டு முறை துப்பாக்கியுடன் சிலபேரை மன்னர் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டங்களுக்கு அனுப்பி சாத்தியங்களை ஆராய்ந்து வரச் சொன்னார்கள்.

ம்ஹூம். கிட்டே கூட நெருங்கமுடியவில்லை. டைட் செக்யூரிடி. ஒரு கொண்டை ஊசியைக் கூட எடுத்துச் செல்ல முடியாமல் இருந்தது. என்னதான் செய்வது என்று இரவெல்லாம் பகலெல்லாம் யோசித்தார்கள். மன்னரை மட்டும் கொன்றுவிட முடியுமென்றால், அது இ.டி.ஏ.வின் சரித்திரத்தில் மாபெரும் திருப்புமுனையாக அமைந்துவிடும். இயக்கத்தின் தீவிரத்தையும் வீரியத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டியது போலாகும். ஒரு பெரிய கவனம் கிடைக்கும். உலகம் தங்கள் குரலைப் பொருட்படுத்திக் கேட்கும்.

சரி, சோர்வடையாமல் முயற்சி செய்யலாம் என்று முடிவு செய்து நிறைய உளவாளிகளைத் தயார் செய்து அனுப்பி வைத்தார்கள். ‘மன்னரைப் பற்றிய தகவல்கள் வேண்டும். என்ன தகவலானாலும் சரி. பைசா பிரயோஜனமில்லாத விஷயங்களும் சம்மதமே. அவரது நடை, உடை, பாவனை, சாப்பாடு, குளியல், டிரெஸ்ஸிங் சென்ஸ், குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், நெருக்கமானவர்கள், நெருக்கமில்லாதவர்கள், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், அரண்மனையில் வசிக்கும் பிறர், அரண்மனைக்கு அடிக்கடி போய்வருகிறவர்கள், அதிகாரிகள், சுற்றுப்பயண விவரங்கள், செகரட்டரி குறித்த விவரங்கள், அனைத்தும், அனைத்தும் வேண்டும்’ என்று சொல்லியனுப்பினார்கள்.

இ.டி.ஏ.வின் உளவுப்படை மன்னரின் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டது.

மாட்ரிட் நகருக்கு வெளியே மாண்ட் டெல் பர்டோ (Monte del Pardo) என்கிற இடத்தில் – வெறும் இடமல்ல; படு அழகான இடம் இருக்கிறது, ஸ்பெயின் மகாராஜாவின் அரண்மனை. ஜார்ஜுவேலா அரண்மனை என்று அதற்குப் பெயர். எத்தனை ஏக்கர் பரப்பளவு என்று அளந்துதான் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட ஒரு கிராமம் சைஸ் என்று வைத்துக் கொண்டால் நமக்குப் போதும். செவ்வக வடிவ சொர்க்க லோகம் அது. உள்ளே போனால் வெளியே வர வழி தெரியாது. பளிங்கும் பவளமும் தங்கமும் வெள்ளியும் இழைத்த மதனமாளிகை. பதினேழாம் நூற்றாண்டில் ஐந்தாம் பிலிப் என்கிற மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. இன்றைக்கு வரை அங்கே ஏசிக்கோ, ஹீட்டருக்கோ அவசியமில்லை. கோடைகாலத்துக்கேற்ற அறைகள், குளிர் காலத்துக்கு ஏற்ற அறைகள் என்று இதம் தரும் இயற்கை அறைகள் பல உண்டு. அந்தக் காலத்துக் கட்டட விற்பன்னர்கள் காட்டிய வித்தை அது. மாபெரும் தோட்டங்கள், மலர்ப் பந்தல்கள், நீச்சல் குளம், டென்னிஸ் கோர்ட், கோல்ஃப் மைதானம், பிரம்மாண்டமான பார், நீள நீளமான அலுவலக அறைகள், ஏழெட்டு உணவுச்சாலைகள், கலை நிகழ்ச்சிகளுக்குத் தனி அரங்கம், தியேட்டர்கள் என்று என்னென்ன வேண்டுமோ எல்லாமே உள்ளே உண்டு.

சாமானியர்கள் உள்ளே போவதென்பது சாத்தியமில்லாத காரியம். உள்ளே வசிக்கும் ஊழியர்கள் வெளியே வருவதற்கும் அவசியம் கிடையாது. கத்திரிக்காய், கொத்துமல்லி, கொசுவர்த்திச் சுருள் முதற்கொண்டு அனைத்தும் உள்ளேயே கிடைக்கும். அரண்மனை ஊழியர்களுக்கான வீடுகள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள் யாவும் அங்கேயே. ஒரு சுற்றுலா மாதிரி எப்போதாவது வெளியுலகத்துக்கு வந்து போனால் போதும். ஆனால், சொர்க்கத்தை விட்டுவிட்டு யார் சுற்றுலாவுக்கு வருவார்கள்?

ஆனாலும் பரவாயில்லை என்று இ.டி.ஏ.வின் உளவாளிகள் அரண்மனையைச் சுற்றி வட்டமிடத் தொடங்கினார்கள். ஒரு சிறு துப்புக் கிடைக்காதா என்று தவமிருந்தார்கள். தபால்காரர்கள்,

கூரியர்வாலாக்கள், அரண்மனைக்குள் சென்று வரக்கூடிய லாரி டிரைவர்கள், ஆம்புலன்ஸ் வேன் டிரைவர்கள் என்று சாத்தியமுள்ள அனைவருடனும் பேசிப்பேசி நட்பு ஏற்படுத்திக் கொண்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி எப்படியோ ஒரு ரெக்கார்ட் க்ளார்க்கின் சிநேகிதத்தைப் பெற்று, அதன் மூலம் மன்னரின் அடுத்த ஆறு மாதத்துக்கான ப்ரோக்ராம் டைரியின் ஜெராக்ஸ் பிரதி ஒன்றை வாங்கிவிட்டார்கள்.

இது போதாது? யதேஷ்டம். பகவான் அனுக்கிரகம் பரிபூரணமாக இருக்கிறது. மன்னர் வாழ்க. அவர் வம்சம் தழைக்கக் கடவது. எடுத்துக்கொண்டு தங்கள் பேட்டைக்கு ஓடியே போய் மேலிடத்தில் அந்த டைரியைக் கொடுத்துவிட்டுக் கைகட்டி நின்றார்கள். அடுத்த வேலை என்ன?

அவசர அவசரமாகப் புரட்டினார்கள். எங்கெங்கே என்னென்ன விழாக்கள் நடக்கின்றன என்கிற விவரம் அதில் இருந்தது. யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்கிற விவரமும். மன்னர் எந்தெந்த விழாக்களில் தலைமை தாங்குகிறார், திறந்து வைக்கிறார், சிறப்புரை ஆற்றுகிறார் போன்ற விவரங்களும்.

கூடவே அந்தந்த இடங்களின் புவியியல், மக்கள் தொகை விவரங்கள், எந்தெந்த இனக்குழு மக்கள் அதிகம் வசிக்கிறார்கள், அவர்களது சமூக, அரசியல் பின்னணி போன்ற விவரங்களும் இருந்தன. ஒவ்வொரு கூட்டத்துக்கும் என்னென்ன விதமான செக்யூரிடி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பது குறித்த சில மேலோட்டமான தகவல்களையும் அதிலிருந்து பெறமுடிந்தது.

மிகப்பெரிய லக்கி ப்ரைஸ் என்று நினைத்துக் கொண்டார்கள். இந்தத் திட்டம் என்ன ஆனாலும் சரி. ஒரு மன்னர் என்பவர் எப்படிப்பட்ட பாதுகாப்பு வளையத்துக்குள் இருக்கிறார் என்பதை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள அது ஒரு பெரிய வாய்ப்பல்லவா?

குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு மன்னர் வருகிறார் என்றால், மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே அந்த இடத்தை வட்டமிட்டு உளவுத்துறை அதிகாரிகள் செயல்பட ஆரம்பித்துவிடுவார்கள் என்கிற தகவல், முதல் முறையாக அவர்களுக்குத் தெரிய வந்தது அப்போதுதான்.

அதன்பிறகு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சுற்றி ஆயிரம் மீட்டர் பரப்பளவை ரகசியமாக அடையாளம் இட்டு, காவல் அதிகாரிகளிடம் அளித்துவிடுவார்கள். அதன்பின் அந்த இடம் காவல் துறையின் ரகசியக் கண்காணிப்புக்கு உள்ளாகும். இருபத்துநான்கு மணிநேரக் காவல். அணு அணுவாக மோப்ப நாய்களை வைத்துப் பரிசோதனை. இரவு பகலாக செக்யூரிடி. அந்தப் பிராந்தியத்தில் உலவும் பிரகஸ்பதிகள் ஒவ்வொருவரையும் ஸ்கேன் பண்ணாத குறையாக அலசி ஆராய்ந்து, அறிக்கை தயாரிப்பு. சந்தேகத்துக்கு இடமாக யாராவது தென்பட்டால் என்னவாவது செய்து அவரை அப்புறப்படுத்திவிடுவது. பிரச்னைக்குரிய இடம் என்றால், ரெட் அலர்ட் செக்யூரிடி. இத்தனைக்கும் பிறகு வெளிப்படையான பரிசோதனைகள், செக்யூரிடி ஃபார்மாலிடிகள் இன்னபிற.

ஓஹோ என்றார்கள் இ.டி.ஏ. பெருந்தலைகள். ‘அதனாலென்ன? பரவாயில்லை. நமக்கு வாகாக ஏதாவது திறப்பு விழா இருக்கிறதா பார்’ என்று சொன்னார்கள்.
இருந்தது.

சான் செபாஸ்டியான் நகரில் ஒரு மீன் பண்ணையைத் திறந்து வைக்க மன்னர் வரப்போகிறார் என்று டைரியைப் பார்த்துச் சொன்னார்கள்.
சான் செபாஸ்டியானா? எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் அலறி எழுந்துவிட்டார்கள்.

அது ஒரு பாஸ்க் நகரம். இ.டி.ஏ.வின் பேட்டை. எனவே முடித்துவிடலாம் என்று தீர்மானம் செய்தார்கள்